Madras Refinery

* 245 *Q*.—THIRU G. SWAMINATHAN : Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(*a*) whether it is a fact that unburnt sulphur gases are being let into the atmosphere from the Madras Refinery; and

(*b*) if so, the action proposed to be taken by the Government to avert the same?

சென்னை எண்ணெய்த் தூய்மை ஆலை

திரு. ஜி. சுவாமிநாதன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினுக்களுக்குப் பதிலளிக்க வேண்டு கிறேன்—

(அ) சென்னை எண்ணெய்த் தூய்மை ஆலையிலிருந்து எரிக்கப் படாத கந்தக வாயுக்கள் காற்று மண்டலத்தில் கலக்குமாறு விடப் படுகின்றனவா?

(இ) ஆமெனில், அதைத் தவிர்க்க அரசு எடுக்கக் கருதியுள்ள நடவடிக்கை யாது?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) ஆம்.

(இ) சென்னை நகரச் சூழ்நிலையில் காற்று அசுத்தமாதல் பற்றி ஆராய அரசாங்கத்தால் நியமிக்கப்பட்டுள்ள குழு தனது அறிக்கையை அனுப்பியுள்ளது. அவ்வறிக்கை அரசின் பரிசீலனையில் உள்ளது. அது தொடர்பாக அந்த நிர்வாகத்தினுடைய பொறியியல் நிபுணர்கள், அந்தத் துறையில் உள்ள வல்லுநர்கள் ஆலோசனையும் கேட்கப்பட்டுள்ளது.

திரு. ஜி. சுவாமிநாதன் : தலைவர் அவர்களே, காற்று அசுத்த மாவது பற்றிய அறிக்கை எப்போது ஆராயப்பட்டு, எவ்வளவு நாளிலே முடிவு எடுக்கப்படும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, இந்த அறிக்கையில் சென்னை நகரத்தில் காற்றினுடைய தூய்மை கெடுவதும், அது சில இடங்களில் விஷவாயுவாக மாறுவதும் ஆகிய தன்மை களைக் குறித்து பல்வேறுவிதமான ஆலைகள், புகைவண்டி நிலையங்கள், தொழிற்சாலைகள் இவைகளிலிருந்து புகை, மேலும் சல்பா-டை-ஆக்சைடு போன்ற இத்தகைய காற்றுகள், இவற்றின் அளவுகள், விகிதங்கள், இவை அனைத்தும் பல்வேறு விதமாகப் பரிசீலிக்கப்பட்டு,

1972 ஆகஸ்ட் 24]

ஒவ்வொரு துறையிலும் எந்தவிதமான நடவடிக்கை எடுக்கலாம் அல்லது முறையான வடிக்கட்டிகளை அந்த ஆலைகளில் பொறுத்த முடியும் அல்லது கெமிகல் மூலமாக அந்த விஷவாயுக் காற்று தவிர்க் கப்பட முடியும் என்று பல்வேறு கட்டங்களில் ஆராயப்பட்டு வரு கின்றன. இந்த குழுவினர் அனுப்பியிருக்கிற அறிக்கையை அடிப்படை அறிக்கையாகக் கருத முடியும். அதை வைத்துக்கொண்டு ஒவ்வொரு தொழிலைப் பொறுத்தும், ஏற்படுகிற விளைவுகளைப் பொறுத்தும் தனித்தனியாகப் பரிசீலித்து முடிவு செய்வதற்கு தொடர்ந்து முயற்சிக்கப்படும்.

திரு. ஜி. சுவாமிநாதன் : தலைவர் அவர்களே, இந்த ஐவருடைய குழு அறிக்கை தனி நபர் ஒருவருக்குக் கொடுக்கப்பட்டிருப்பதாகவும், அந்தத் தனி நபர், அதை ஆராய்ந்து மறுபடியும் ஒரு அறிக்கை கொடுப்பார் என்றும் சொல்லப்படுகிறது. அந்த அறிக்கை வருவதற்கு ஓர் ஆண்டோ அதற்கு மேலோ ஆகும் என்றும் சொல் கிறார்கள். இவ்வளவு காலதாமதம் எதற்காக? ஐவர் குழு ஒரு அறிக்கை சமர்ப்பித்து, அந்த அறிக்கையை ஆராய மறுபடியும் ஒரு தனி நபர் குழு தேவையா என்று தெரிவிக்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, அப்படி ஒருவரும் என்னிடத்தில் குறிப்பு இல்லை. ஆனால் இந்த ஐவர் என்று சொல்லப்படுகிறது, ஐவரோ அறுவரோ, அந்த எண்ணிக்கையில் எது சரி என்று தெரியவில்லை. ஆனால், பல்வேறு துறையைச் சேர்ந் தவர்கள் மொத்தமாக நகரத்திலே உள்ள காற்று தூய்மை கெடுவது பற்றி ஆராய்ந்தார்கள். தூய்மை கெடுவது பொறியியல் துறையில் பல்வேறு ஆலைகள் மூலமாக இருக்குமானால், சிமின்ட் ஆலையாக இருந்தால், அதற்கு ஒருவிதமான வடிகட்டி முறை ஏற்படுத்தப்பட வேண்டும். "எலக்டிரோ-ஸ்டேடிக்" என்று சொல்லப்படுகிறது. ஒருவிதமான கருவி பொருத்தப்பட வேண்டும். அது வெளி நாட்டிலிருந்து வரவழைக்கப்பட வேண்டும். "ஆயீல் ரிபைனரி"— எண்ணெய் சுத்திகரிப்புத் தொழிற்சாலையாக இருக்குமானால், இப் போதே அங்கேயிருந்து வெளிப்படுகிற கடுமையான நச்சுக் காற்றில் இவை அடங்கியுள்ளது.

Vapours of hydrocarbon, foulsmelling gases, hydrogen sulphide, mercoton and ammonia are evolved.

இப்படி வருபவற்றைத் தடுப்பதற்கும், அவற்றை எரிப்பதற்கும் சில முறைகள் இருக்கின்றன. அவற்றை எறிப்பதற்கு 38 மீட்டர் உயர முள்ள குழாய் பொருத்தியுள்ளனர். அந்தப் பொருள் வெளியே

வரும்போது எறிந்துவிடுமானால் அதனுடைய கெடுதல் தன்மை குறைந்துவிடுகிறது. ஆகவேதான் எண்ணெய் சுத்திகரிப்புத் தொழிற் சாலையில் உள்ள ஒரு பெரிய சிம்னியில் எப்போது பார்த்தாலும் இரவு நேரத்திலும், பகல் நேரத்திலும் தொடர்ந்து எறிந்து கொண்டிருக்கிற காட்சி காணப்படுகிறது. ஆனால் இவ்வளவும் போதாமல், இதற்கு மேலும் என்னென்ன செய்வதன் மூலம் காற்றிலே கலக்கக் கூடிய அத்தகைய சக்தியுடைய நச்சு வாயு சேராமல் இருக்கும் என்பது மிகவும் தொழில் நுணுக்கத்தோடும், விஞ்ஞான அறிவோடும் அணுகப்பட வேண்டிய ஒன்று. அந்த முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன.

Fishing near Pulicat Area

*246 Q.—THIRU S. VELLAPANDIAN (on behalf of Thiru **V. ISVARMURTI) : Will the Hon. the Minister for Harijan Welfare be pleased to state—**

(a) whether the State Government and the Andhra Government have agreed on a joint venture for fishing near Pulicat area; and

(b) if so, the details thereof?

பழவேற்காடு பகுதியில் மீன் பிடிப்பு

திரு. எஸ். வெள்ளப்பாண்டியன் (திரு. வ. ஈஸ்வரமூர்த்தி சார்பில்) : மாண்புமிகு அரிசன நல அமைச்சர் அவர்கள் கீழ்க் கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) பழவேற்காடு பகுதியில் மீன் பிடிப்பதற்காக கூட்டு முயற்சி மேற்கொள்ள இம்மாநில அரசும் ஆந்திர அரசும் உடன் பாடு செய்து கொண்டுள்ளனவா?

(இ) ஆம் எனில், அது பற்றிய விவரங்கள் யாவை?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : (அ) & (இ) இல்லை.

Salt Industry at Vedaranyam in Thanjavur district

*247 Q.—THIRU S. VELLAPANDIAN (on behalf of Thiru **V. ISVARMURTI) : Will the Hon. the Minister for Industries be pleased to state—**

(a) whether the Government are aware of the languishing of the salt industry at Vedaranyam in Thanjavur district; and

(b) if so, the steps taken to improve the production of salt?